*Registered No. M. 408.*

உ

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு.

## திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

# THE THIRUNAVUKARASU.

## PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் உ ] திருநெல்வேலி: குரோதிஸு பங்குனிமீ உ௰-உ; 1905-ம் ஸு ஏப்பிரல்மீ 1-உ [இலக்கம் ரு.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"பொறிவள ரரவமும் போழிள மதியமுங் கங்கை யென்னு, நெறிபடு குழலியைச் சடைமிசைச் சுலவி வெண்ணீறுபூசிக், கிறிபட நடந்துநற் கிளிமொழி யவர்மனங் கவர்வர்போலுஞ், செறிபொழி றழுவிய திருநெல்வேலி யுறை செல்வர்தாமே."

"உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து வுமையோடும் வெள்ளை விடைமேன், முருகலர் கொன்றை திங்கண் முடிமே லணிந்தெ னுளமே புகுந்த வதனாற், றிருமகள் கலைய தூர்தி சயமாது பூமி திசைதெய்வ மான பலவு, மருநெதி நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

---

உ

## பத்திரிகைச் சிறப்பு,

---

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

திருநாவுக் கரசென்னுந் திருநாம மப்பூதி செப்பி முன்னாட், கருநாவுக் கதிதோராய்க் கதிபெற்ற வுண்மையினைக் கருத்துள் வைத்துக், குருநாவுக் கொப்பாகக் குவலயத்தோர் முத்திபெறக் கூறு மாற்றாற், றிருநாவுக்கரசென்னத் திகழ்ந்திடுமிப் பத்திரிகை செகத்தீர் தேர்மின்.

புறச்சமயப் படுகுழியிற் புகுதாமே பெம்மையெலாம் பொற்பார் சைவ, வறச்சமய வழிநிறீஇ யரனடியை யகங்கொளச்செய் யருளினாலே, திறச்சமணர் வஞ்சனையைத் திருவருளால் வென்றவரு செல்வர்நாம, முறச் சமய மிதுதன்னி லுலவிடுமிப் பத்திரிகை யுலகீர் காண்மின்.

கலிவிருத்தம்.

காவுக்குண் மிக்கது கற்பக தாரு
தேவுக்குண் மிக்கவன் செந்திரு மார்பன்
நாவுக்குண் மிக்கநன் னாவுக் கரசு
பூவுக்குண் மிக்கது பொற்பத் திரத்துள்,

இங்ஙனம்,
சி. சுவாமிநாதபண்டிதர்.

---

நாவுக் கரசு வனக்கரசு கமலக் கரசுங் காணு நந்
தேவுக் கரசு பதம்பரசு திருவா லருட்பெற் றோங்குதிரு
நாவுக் கரசெம் பெருந்தகைநற் பெயரினோங்கி நெல்லைவரு
நாவுக் கரசாம் பத்திரமே நயந்து வாழி வாழியவே.

இங்ஙனம்,
நா. கதிரைவேற்பிள்ளை,

---

'திருக்குற்றாலநாதருக்கு வற்றாக்குடிநீர் வைத்'தற் காதாரம் "திருக்குற்றாலத் தலபுராண"த்திலே இருக்கின்றதா, அல்லது கர்ணபரம்பரைதானா?

உண்மை உசாவுவோன்.

---

"சேறைக் கவிராசபிள்ளை இயற்றிய "திருக்காளத்தி நாதருலா"வும், "திருப்பூவணம் கந்தசாமிப் புலவரியற்றிய "திருப்பூவண நாதருலா"வும் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய ப்ரும்ஹஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களால் அரும்பதவுரைமுதலியவற்றுடன் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு, வெளியிடப்பட் டிருக்கின்றன. சைவசமயிகளாராய்ச்சிக் குரியனவாகிய அவ் விரு நூல்களையும்பெற விரும்புவோர் குறித்த பண்டிதரவர்கட் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். அப் புத்தகங்களின் விலை முறையே அணா 6-ம் 4-ம் ஆம். ப—ர்.

---

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ 1, மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ 2, தனிப்பிரதி 1-க்கு அணா 2.

உ
சிவமயம்.

# திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"குழிந்து சுழிபெருநா பியின்கோண் மயிர்நிரையார்—குரும்பை முலையிடையே செலுத்தநெஞ்சமடவாய், அழிந்த பொசியதிலே கிடந்திரவு பகலீ—யளைந்தயருமதுநீ யறிந்திலைகொல் மனமே, சுழிந்த சுழிகிடோரளினங்கிதய செகவே—கசிந்திதய மெழுகா நரும்பதிகநிதியே, பொழிந்தருளுதிருநா வினையெச்சளாசினையே—புரிந்துநினை யிதுவே மருந்துபிறிதிலையே."

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோயிற் சீர்திருத்தம்.

### I

திருநெல்வேலி:
ஸ்ரீ நிலைத்தேர்த
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்
திருக்கோயில்.

இத் திருக்கோயிற் பக்கத்தே, முன்னொருகாலத்திலே, இவ்வூர் ஸ்ரீ நெல்லையப்பர் கோயில நிலைத்தேரொன்று நின்றமையாலும், இத்திருக்கோயிலிலே சைவசமய குரவர் நால்வருளொருவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் உருவத் திருமேனிகொண்டெழுந்தருளியிருத்தலினலும் இஃதிப்பெயரால் வழங்கப் பெறுகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர், தமது திருக்கூட்டத்தோடு இத் திருநெல்வேலிக் கெழுந்தருளிய காலத்து, இத் திருக்கோயிலிலே தங்கியருளினரென்பது ஐதிகம். இத் திருக்கோயில், இந்த ஜில்லா சிவதேவஸ்தான கமிட்டியாராளுகைக்கும், ஸ்ரீ நெல்லையப்பர் கோயிற்றருமகர்த்தர்கள் பராமரிசத்திற்கும் உட்பட்டது. இத்திருக்கோயில், ஸ்ரீசந்திர புட்கரிணியென்னும் சிவதீர்த்தத்திற்கும் ஸ்ரீ சுவாமி சந்நிதித்தெருவின் கீழற்றத்திற்கும் இடையே, அமைந்திருக்கின்றது. இவ்வமைதி, குருதரிசனமே சிவதரிசனத்திற்கு அதிமுக்கியகாரணமாதலைவிளக்கி, "மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர், வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்னும் ஸ்ரீ தாயுமானசுவாமிகள் திருவாக்கை எமது ஞாபகத்துக்குக் கொண்டுவருகின்றது. இதனல், இத் திருக்கோயிலின் இன்றியமையாமை இனிது துணியப்படும்; மேலும், குறித்த சிவதீர்த்தத்தே, ஸ்ரீ நெல்லையப்பர், ஸ்ரீ காந்திமதி தேவியாரோடெழுந்தருளித் தெப்ப உற்சவம் கொண்டருளும்போது, இத் திருக்கோயிற்கும் எழுந்தருளிப் பக்த ஜனங்கட்குக் காட்சிகொடுத்தருளும் வழக்கமும் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது; அதன்பொருட்டேபோலும், இத் திருக்கோயிற்குத் தென்புறமாக ஓர் பெருந் திருவாயில் திறக்கப்பட்டிருக்கின்றது.

இப் பெருந் திருவாயில், இத் திருக்கோயிலின் அபிமுகத் திருவாயிலை மறைத்து வாடகத்தின்பொருட்டுக் கோயிலதிகாரிகளால் விடப்பட்டிருக்குஞ் சில்லறைக் கடைகளிருக்கும் இடத்தில் வகுக்கப்படின், அவ் வபிமுகத் திருவாயிலெவ்வழக்கற்றடைபடாதிருத்தலோடு, குறித்தவுற்சவ காலத்தே, இத் திருவாயிற்கு நேராக அமையக் கிடக்கும் கிழப்புறத்தெருவின் தெற்கற்றம்வரையும், யாதோரிடைஞ்சலுமின்றி, எண்ணிறந்தபக்தஜனங்கள் நின்று, சிவதரிசனஞ் செய்துய்தற்கு நற்கேதுவாம். அங்ஙனம் வகுக்குங்கால், ஸ்ரீ நெல்லையப்பர், ஸ்ரீ காந்திமதி தேவியாரோடெழுந்தருளியிருத்தற் கேற்றதோர் பெருந்திருப்பீடமும் அங்கே வகுக்கப்படுதல் வேண்டும். குறித்த அபிமுகத்திருவாயிலைமறைத்து நீசசாதியாரும் வேறு பிறரும் வழங்கி இத் திருக்கோயிற் சூழலை அசுசிப்படுத்தற்கிடனய் வாடகத்திற்கு விடப்பட்டிருக்கும் அக்கடைகள் இப்பொழுதே ஒரு சிறிதுந் தாழ்க்காது அப்புறப்படுத் தொழிக்கப்படுதல் வேண்டும். அம்மட்டோ! குறித்த திருக்கோயிற் சூழலிற் சில பாகம் அயலவரால் அபகரிக்கப்பட்டிருப்பதாகவும் தோற்றுகின்றது. அதனையும் குறித்த கோயிலதிகாரிகள் கவனித்திடுதல் வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் இயைய இத் திருக்கோயில், சிறப்புவகையாற், குறித்த கோயிலதிகாரிகளால் முழுவதும் ஜீர்ணோத்தாரணம் செய்யப்படின் மிகவும் சிறப்பெய்தும்.

### II

ஸ்ரீ நெல்லையப்பர்கோயிற்
கோபுரவாயிற் கொட்டகை.

இதனைக் கோபுரவாயில் முன்மண்டபம் எனவும், பந்தர்மண்டபம் எனவும் வழங்குப. இம்மண்டபத்தின் மேலுள்ள கொட்டகையின் இருபக்கங்களிலும் மரத்தினல் வேலைசெய்தமைத்திருக்கும் விம்பங்களை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அவ்வாறு நோக்கும் மெய்யன்பர்மனத்தைப்புண்படுத்தாதொழியா. சிறப்புவகையால் அவை தம்மை இயற்றினேர்க்கும், இயற்றுவித்தோர்க்கும், பாதுகாப்போர்க்கும், பொதுவகையாற் சைவர்கட்கும் வசை விளைப்பனவாம். அம்மட்டோ! அவை சைவசமயத்தின் நோக்கத்தையும் அடிப்ப

டையையும் ஒருங்கே பெயர்த்தெறிவன போ
லத் தம்மை நோக்கும் அயற்சமயிகளுள்ளத்தே
சைவத்தைப் பற்றி ஒருசிறிதாயினும் கவுரவபுத்தி
தோற்றுமற் கெட்ட அபிப்பிராயத்தையே விளைப்
பனவாம். இன்னும் அவை செய்யக்கூடிய குறும்
புகள் பலவாகும். ஆதலால் அவற்றை மறைத்திடு
தல்மட்டிற் றிருத்தியடையாது, அறவே ஒழித்
தவற்றிற் கீடாக நற்புத்தி போதிக்கும் நல் விம்பங்
கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

இவையொத்த கெடுவிம்பங்கள், திருத்தேரி
லும் அமைக்கப்பட் டிருப்பதாகத் தெரிகின்றது.
அவற்றையு மங்ஙனமே செய்தல் அறிவுடையோர்
கடனும். ஆயினும் "ஏழைசொல் அம்பலமேறுமா"
வென்றஞ்சுகின்றேப். (முன்னர்ச் சிவாகம பாட
சாலை விஷயமாகச் சில தெரிவித்[illegible]னம்; அதனை
ஒரு சிறிதாயினும் கவனித்ததாகத் தெரியவில்லை
யே!) ஆயினும் எம் கடமையை நாம் செய்தால்
அக்கோயிலதிகாரிகள் தம் கடமையைத் தாமறிவ
ரென்றறிந் தவ்வப்போது எமக்குத் தோற்றும் சில
சீர்திருத்தங்களை அவரிடத்தே தெரிவித்து வரக்
கடவோம்.

---

௨

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

## வைதிக சைவமத பரிபாலனம்.

---

### தேவாரம்.

திருப்பாசுரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

வைதிக சைவமாவது, அநாதியே வினையினீங்கி
விளங்கும் முற்றறிவு முதலிய எண்குணப் பெருஞ் சிறப்
பினை யியல்பாகவே யுடைய பரமபதியாகிய சிவபிரான்
அருளிச்செய்த முதனூல்களாகிய வேதாகமங்களின் மெ
ய்ப்பொருள்களைத் தெளிவாக எடுத்து மலைவற வுணர்த்து
வதாய், வழிநூல்களாகிய புராணம், ஸ்மிருதி, உபாகமங்
களும்; புடைநூல்களாகிய கற்பசூத்திரம், அட்டப்பிர
கரண முதலியனவும் கூறும் பொருள்களோடு இணங்கி
விளங்குவதாய்ச், சமயகோடிகள் கூறும் பொருட்பகுதிக
ளெல்லாம் தன்னிடத்தே ஏகதேசமாய் அடங்கத் தான்
அவற்றுள் அடங்காமல் வியாபித்து நிற்பதாய்ப், பக்குவ
மிக்க மாந்தர்கள் பலரும் பற்றிப் பயின்று பரகதியினை அ
டைதற்கு அனுகூலமான சித்தாந்த நுண்பொருட் பரப்பு
முழுதுமுடையதாய்ச், சமய அரசாய் மேம்பட்டு விளங்
கும் பழைய நெறியாம்.

இவ்வைதிகசைவம் அகத்தியர், உபமன்னியர் முத
லிய முனிவர்களும், சிவஞானப் பெருஞ்செல்வர்களாகிய
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாய
னார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்
என்னுஞ் சைவசமயாசாரியர் நால்வரும், திருமூலநாய
னார் முதலிய மற்றை உண்மை நாயன்மார்களும், மெய்
கண்டதேவர் முதலிய சந்தானசாரியர்களும், அரதத்தா
சாரியர் முதலிய மற்றை ஆன்றோரும் போற்றிப் புகழ்ந்து
பாராட்டி அனுட்டித்தொழுகிய பெரிய நெறியுமாம்.

"இயல்பென்றுந் திரியாம லியம மாதி யெண்குண
முங் காட்டியன்பா லின்ப மாகிப்—பயனருளப் பொரு
ள்கள்பரி வாரமாகிப் பண்புறவுஞ் சௌபான பக்ஷங்கா
ட்டி—மயலறுமந் திரஞ்சிகைசோ திடமாதி மற்றங்க
நூல்வணங்க மௌன மோலி—யயர்வறச் சென்னியில்
வைத்து ராசாங்கத்தி லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்
தோ" "அந்தோவீ ததிசயமிச் சமயம்போ லின் றறிஞரெ
ல்லா நடுவுறிய வணிமாவாதி—வந்தாடித் திரிபவர்க்கும்
பேசா மோனம் வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்று—
மித்தாதி போகநலஞ் பெற்றபேர்க்கு மிதுவன்றித் தாய
கமவே றிலையில்லை—சந்தான கற்பகம்போ லருளைக்
காட்டத் தக்கநெறி யிந்நெறியே தாஞ்சன் மார்க்கம்."
என்னுந் தாயுமானசுவாமிகள் திருப்பாட்டுகளும் இவ்வு
ண்மைக்குத் தக்கதொரு நற்சான்றும்.

இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய வைதிகசை
வோதய பானுவின் விளக்கம், வைதிக சைவர்கள் வை
திக சைவநூல்களைக் கல்லாமையினாலும், எங்கேனுஞ் சி
லர் கற்றாலும் பிறருக்குக் கற்பித்தலும் எல்லாரும் எளி
தில் அறிந்துய்யத் தெளிவ கப் பிரசங்கித்தலும் இல்லா
மையினாலும், இக்காலத்தில் வரவரக் குன்றுகின்றது! பக
ற்பொழுதெல்லாம் பானுவின் கிரணப் பரப்புள் அடங்கி
ஒளிகுன்றி யொடுங்கிய தாரகா கணங்கள், அப்பானுவின்
கிரணவிளக்கங் குறையும் இராப்பொழுதில் வெளிவந்து
விளங்கி வீக்கம் பெரிது காட்டுதல்போல, முன்னெல்
லாம் வைதிக சைவோதய பானுவின் பெரிய ஞானப் பி
ரகாசத்துளடங்கி வலிகெட்டு ஒடுங்கிக்கிடந்த பரமத கண
ங்கள் அது விளக்கங் குறையும் அற்றம் நோக்கி இக்கால
த்து வெளிவந்து தலையெடுப்புற்று வீக்கங் காட்டுகின்
றன! அதுமட்டோ, பெருவலியுடைய மிருகவேந்தாகிய
சிங்கம் அருவரை முழையி லடங்கி யொடுங்கி யிருக்கும்
வலிமிக்க பொய்யொடுக்கத்தினைக்கண்ட மரையும், மா
னும், கேழலும், வேழமும் வலியில்லாத மெய்யொடுக்க
மென்று விபரீத சிந்தனைசெய்து இதனோடுபொருது வெ
ன்றியெய்துவமென்று குறித்துப் பகைத்து எதிரேறுதல்
போலக், காலங்கருதி யிருக்குஞ் சமயவேந்தாகிய வைதிக
சைவத்தின் சூழ்ச்சி பொருந்திய மாட்சிமை யொடுக்கத்
தைக் கண்ட பரமத கணங்கள், இதனோடு பகைத்துப்
பொருது வென்றியெய்துவமென்று குறித்துத் தருக்கிச்
சொற்போர் புரிய முந்துகின்றன,

தேசாபிமானம், சாதியபிமானம் முதலாக மனிதர்க்
கு அபிமானங்கள் பலவுண்டு. அவையெல்லாம் உயிர்க்
குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொய்ப்பொருள் பற்றி அ
வ்வுயிர்களிடத்து நிகழுங் குணங்களாதலால், அவ்வப்
பொருட் பற்று விட்டவிடத்துக் குன்றி ஒழியும். மதாபி
மானம் அவைகள்போலன்றி, உயிர்க்குயிராகிய கடவு
ளின் சம்பந்தங்காரணமாக உயிர்களிடத்து விளங்கும் கு

ணமாதலால், அது இம்மை மறுமை இரண்டினும் குன்றி ஒழியாமல் நின்று உயிர்க்குறுதிதரும் சிறப்புடைய அருட்குணமாம். ஆதலால் இச்சிறப்பினையுடைய மதாபிமானத்தையே விவேக புருஷர்கள் பெரிதும் போற்றியொழுகுதல் வேண்டும். இனி ஒருவர் தம்மதங் குன்றவருங் காலத்து அதனைப் பாதுகாத்தலைச் செய்யாமல் வாளா இருந்துகொண்டு நாம் மதாபிமானம் பெரிது முடையோம் என்று வாயால் வெற்றுரை வழங்கித் தம்மைத்தாமே மதித்து இறுமாக்கும் வெறுஞ் செம்மாப்பு நாடகமாமன்றி மதாபிமானமாகுமோ?

மிடிகாரணமாக அல்லது பகைகாரணமாகத் தங்குடி கெடவந்தவிடத்து, அம்மிடி பகைகளைத்தீர்த்துக் குடியையோம்புதல், அக்குடிப்பிறந்த நன்மக்களுக்குக் கடனாம்; அது "தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன — வோங்குகுல நையவத னுட்பிறந்த வீரர் - தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொ — னீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்து போந்தான்" என்பதனானு மினிதுவிளங்கும். அதுபோலவே, மதநூலறிவு பேணாமை காரணமாக அல்லது பரமதவாதிகள் வாதப்போர் காரணமாகத் தம்மதங்குன்றவந்த விடத்து, மதநூலறிவை அபிவிருத்தி செய்தும் பரமத கண்டனஞ் செய்தும் அதனை யோம்புதல், அம்மதத்துப்பிறந்த விவேகபுருஷர்களுக்குக் கடனாமன்றோ? "நிறுத்திடவல் லானமல னானெறியை யென்று — மறுத்திடவல் லானவல மார்க்கமய லுற்றே — நிறுத்திலன் மறுத்தில னெனிற்கரிச னேச - மறுத்தவனை மாகைகரி சல்லவற மாமே" எனச் சிவதருமோத்தரத்துட் கூறியதூஉம் இதனை வலியுறுத்தும்.

இன்னுங் குலத்தைப் பாதுகாப்பாரைக் குலத்தாரே தெய்வமாகக்கொண்டு வழிபடுவர்; மதத்தைக் காப்பாரை மதத்தரெல்லாந் தெய்வமாகக்கொண்டு வழிபடாநிற்பர். இன்னும் குலங்காப்பவர் புகழ் குலமுள்ளவரையு நிற்கும்; மதங்காப்பவர் புகழ் உலகமுள்ளவரையு நிற்கும். இவர்க்கு உண்டாகும் இம்மைப்பயன் இவ்வளவாயின் மறுமைப்பயன் அளவு சொல்லமுடியுமோ? சைவசமயத்திற்குச் சமணர் சாக்கியரென்னு மித்திறத்தரால் விளைந்த கேட்டைநீக்கி அதனைப் பாதுகாத்தருளிய சமயாசாரியர்கள் நால்வரும்பெற்ற புகழும் பயனும் இன்று நின்று நிலவுமன்ற அவற்றைத் தேற்றுதல் காண்க.

மேலேசொல்லிய பிரபல நியாயங்களால், வேந்தர்க்குக் கேடுநீக்கி நாடுகாத்தல் அத்தியாவசியகஞ் செய்யப்படுவதோர் தருமமாதல்போல, வைதிக சைவர்களாகிய நமக்குக் கேடுநீக்கி நமது வைதிக சைவமத பரிபாலனஞ் செய்தல் அத்தியாவசியகஞ் செய்யற்பாலதொரு சிவபுண்ணியமென்பது துணிபாம். இதனான் முடிந்தபொருள், வைதிக சைவர்களாகிய நாமெல்லாம் இச் சிவபுண்ணியத்தினை விரைந்து செய்யப்புகுதல் வேண்டுமென்பது.

இனி நாம் நமது வைதிகசைவமதத்திற்கு வருங்கேட்டை நீக்கி அதனைப் பரிபாலனஞ் செய்யப்புகுங்கால், சிரத்தையுடன் பலர் ஒருங்கு கூடிநின்றே அத்தொழிலியற்றல் வேண்டும். அப்படியன்றித் தனித்தனி செய்யப் புகுவோமாயின், சூழ்ச்சிக் குறைவினாலும் காப்பில்லாமையினாலும் வரும் இடையூற்றினால் தளர்ந்து எடுத்த கருமத்தைக் கைவிடவரும். "தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீ — ரொண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்க — டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்க ளண்டர்நா டாள்வோநா மல்லற்படைவாராமே" என்னும் திருவாசகச் செந்தமிழ்ச் சுருதியும் இதற்குப் பிரமாணமாம்.

வைதிகசைவபரிபாலனஞ் செய்யும் வலியுடையார்க்கு அது செய்தலின்மிக்க புண்ணியமில்லை; அவ்வலியுடையாராயிருந்தும் அது செய்யாமையால் விளையும் பாவத்தின்மிக்க பாவமும் அவர்க்கில்லை. "கோறுநற் சிவதருமசிவஞானத்தை நிறுத்திடுவோ னிலுமுயர்ந்தோ னிலத்தில்லை — பகர்பரம சிவயோகி யவனேயாகும் பரிவினிறுத்திடுமாற்றல் படைத்துமுய்தி — யாலுமய லானிறுத்தா தொழிந்தோன் யோகி யாயினுமீ சாப்பிரிய னல்லனனான் — புகருறுதி நரகினிடை வீழ்ந்து புன்கண் பொருந்திடுவ னெனமறைகள் புகலுமன்றே." என்னும் திருவாக்கே இதற்குத் தக்க பிரமாணமாம். அது நிற்க.

நான் சிறுவனாயிருக்குங் காலத்தில் பரமதத்தர்கள் சிலர் வைதிக சைவத்தைத் தூஷிக்கக் கேட்டுப் பொறாது வருந்தி, அத்தூஷணங்களைப் பரிகரித்தல் வேண்டுமென்னுங் கவலை பெரிதுடையேனாகி, வைதிக சைவாசாரியர்களை யடைந்து வழிபட்டு, வைதிகசைவ சாஸ்திரங்களை அவரிடத்துக் கிரமமாகக் கற்பேனாயினேன். வைதிகசைவ நூல்களிற் சிலவற்றைக் கற்றமாத்திரையில் அவ்வைதிக சைவ சமயத்தில் அவர்கள் ஏற்றிய தூஷணங்கள் முழுப் போலியென்று தெளிந்து அவற்றைப் பரிகரிக்கும் வலியுடையேனாயினேன். இன்னும், அத்தெளிவானது வைதிகசைவ நூல்களைக் கசடறக் கற்றறிதற்கண் மனவூக்கத்தினை முன்னிலும் அதிகமாக எனக்குண்டாக்கிற்று. இவ்வண்ணம் பெருமுயற்சியோடு வைதிகசைவ நூல்களையும் பரமதநூல்களையும் நன்றாகவாராய்ந்து அறிவை விருத்திசெய்து கொண்டு, என்மென்மையை நோக்காமல் சிவபிரான்றிருவருளை முன்னிட்டு நின்று வைதிக சைவ பரிபாலனஞ் செய்தலாகிய இந்த உத்தமோத்தம சிவ புண்ணியத்தினைச் செய்யத் தொடங்கினேன். நான் சிலகாலம் மாணாக்கர்களுக்குக் கருவிநூல்களையும் சமயநூல்களையும் கற்பித்தும், சிலகாலம் அரியநூல்களைத் தேடிப்பெற்று ஆராய்ந்தும், சிலகாலம் வைதிகசைவ பரிபாலன விஷயங்களை எழுதிப் பத்திரிகைகளிற் பிரசுரிப்பித்தும், சிலகாலம் கிறிஸ்துமத கண்டனங்கள் எழுதி யச்சிட்டுப் பரப்பியும், சிலகாலம் பலர்க்கும் உபயோகப்படும் உரைகளையும் நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தியும், சிலகாலம் கிறிஸ்தவர்களாகிய பாதிரி முதலானவர்களோடு சமயவாதஞ்செய்தும், சிலகாலம் தமிழ்நாடெங்கும் போய் வைதிகசைவப் பிரசங்கங்கள் செய்தும் வாழ்நாள் கழிக்கின்றேன். கல்வி கற்பித்தல் பிரசங்கஞ் செய்தல் என்னுமித் தொழில்களாற் பொருள் சம்பாதித்தலை நான் மேற்கொண்டிலேன். அப்புண்ணியத் தொழில்களை ஆன்மலாபத்தின்பொருட்டே செய்யுஞ் சங்கற்பமுடையேன்.

வைதிகசைவ பரிபாலனஞ் செய்யும் விருப்பம் முன்னையினும் அதிகமாக என்னுளத்திற் குடிகொண்டு அதனைக்கவர்ந்து மேற் செல்கின்றது. அவ்விருப்பத்திற்குத் தக்கபடி அப்புண்ணியத்தினைச் செப்பமாகச் செய்யக்

கைப்பொருள் போதாது. இனிப் பொருட்குறைவையெண்ணி இம் முயற்சியைக் கைவிட்டு ஒருசிவஸ்தலத்தில் ஒடுங்கியிருந்து சிவதரிசனஞ்செய்து ஞானநூல்களை ஓதிக்கொண்டு காலம் போக்குவல் என்று அடங்கப் புகுவேனாயினும், வைதிகசைவாபிமானம், அங்ஙனம அடங்கியிருக்க விடாது, அம்முயற்சிகொண்டு செலுத்துகின்றது. அந்தோ! இது என்னாற் றடுக்கற்பாலதொன்றன்று; இவ்வுண்மை உயிர்தோறு மொளித்துநிற்கு மொருவற்கே இனிது விளங்கும். இப்படி யெல்லாம் வருத்தமுற்றும், இப்புண்ணியத்தினைச் செய்துய்யச் சிவபிரான் திருவருள் பாலித்தருளுவார் என்னுந் திடம் என் மனதினை விட்டகல்கின்றிலது, "ஊழையு முப்பக்கங் காண்பருலைவின்றித் தாழா துஞற்று பவர்." என்னுந் திருக்குறளும் இழுக்கலுடையுழி யூன்றுகோல் போல, இத்தளர்ச்சிக் காலத்தில் எனக்குப் பற்றுக்கோடாய் உறுதி தருகின்றது. ஆதலால், வேண்டுவார் வேண்டியதே யீயும் பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபிரான், "குடிசெய்வலென்னு மொருவற்குத் தெய்வ-மடிதற்றுத் தான்முந்துறும்" என்ற திருவாக்கின்படி முன்னின்று இப்புண்ணியந் தலையெடுக்கத் திருவருள் பாலித்தருளுவரென்று கடைப்பிடித்து மேலும் முயலுகின்றேன்.

விதரணகுணமும் வைதிகசைவாபிமானமும் பெரிதுமுடைய பிரபுக்களாகிய அன்பர்களே!

நான் வைதிகசைவ பரிபாலனத்தைத் தளராமல் நிலையுற்றுச் செய்வதற்கு நீங்கள் செய்யும் உதவி இரண்டுண்டு. "அருளென்னு மன்பீன் குழவி, பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு" என்று ஆன்றோர் அருளிச்செய்தபடி, இந்த அருட்சிவ புண்ணிய வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒவ்வோர் தொகைப்பொருளை மனமுவந்து கொடுத்தலொன்று. நான் செய்யும் இச்சிவபுண்ணியம் விருத்தியடையும்படி உடனின்று வேண்டுஞ் சாதகங்களை அன்போடு செய்துவருதல் மற்றொன்று. உங்களால் உதவப்படும் பொருள் இப்புண்ணியத்தினைச் செய்தற்குப் போதும் அளவுடைத் தென்று காணப்பட்டவுடனே, அதுகொண்டு திருச்செந்தூரில் ஸ்தாபித்து நடத்திவரும் சுப்பிரமணிய வித்தியாசாலையின் பொருட்டு ஒருநிலம்வாங்கி அதில் அவ்வித்தியாசாலையைக் கட்டிப் பிள்ளைகளுக்கு வைதிகசைவ நூல்களைக்கற்பித்து வைதிகசைவமத பரிபாலனத்தை நன்குசெய்துவர நிச்சயித்திருக்கின்றேன்.

இன்னும் என் பொருள்கொண்டு சென்னைமாநகரில் அச்சியந்திரசாலை ஒன்று தாபித்து இலகுவான வசனநடையில் வைதிகசைவ கிரந்தங்கள் இயற்றியும் பழைய நூல்களையும் உரைகளையும் பரிசோதித்தும் பிரகடனஞ் செய்துகொண்டுவர நிச்சயித்திருக்கின்றேன். இப்படித் தாபிக்கப்படும் அச்சியந்திர சாலையால் வரும் ஊதியத்தைக்கொண்டு எனது பூசை போசன முதலியவற்றை நடத்தி எஞ்சியபொருளை வைதிகசைவ பரிபாலனத்தின் பொருட்டே உபயோகப்படுத்துவேன். இந்த அச்சியந்திரசாலையால் நான் திருவண்ணாமலையில் கட்டுவித்து நடத்த உத்தேசித்திருக்கும் வித்தியாசாலையும் சிதம்பரத்திற் கட்டுவிக்க உத்தேசித்திருக்கும் சேக்கிழார் கோவிலும் மிகப் பலப்பட்டுச் சிறப்புறு மென்பதற்கையமில்லை. நான் இந்த நற்சிவதருமத்தினை நிலையுற்றுச் செய்தற்கு அன்பர்களாகிய நீங்கள் செய்யும் பேருதவியே காரணமாதலால், நான் அடையும் புகழ் புண்ணியங்களிலும் அதிகமான புகழ் புண்ணியங்களை நீங்கள் அடைவீர்களென்பது சொல்லவேண்டுமோ!

நான் இந்தச் சிவபுண்ணியத்தின் பொருட்டுச் செய்யும் பெருமுயற்சியை நன்கறிந்த விவேகிகளாகிய நீங்கள் தாழாது முந்தி யுதவிசெய்வீர்களென்று நம்புகிறேன்.

இந்தச் சிவதருமம் தமிழ்நாடெங்கும் வளர்ந்தோங்கும்படி பொருளுதவி முதலியன செய்யும் அன்பர்கள் உதவிவரலாறு காலந்தோறும் பத்திரிகை வாயிலாக அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

## ஞானபூசை.

### சிவஞான சித்தியர்.

ஞானநூ றனையோத லோதுவித்த னற்பொருளைக் கேட்பித்த றான்கேட்டனன்று, யீனமிலாப் பொருளதனை சிந்தித்த லைந்து மிறைவனடி யடைவிக்கு மெழின்ஞான பூசை, யூனமிலாக் கன்மங்க டவஞ்செபங்க டியான மொன்றுக்கொன் றுயருமவை யூட்டுவது போக, மானவையான் மேலான ஞானத்தா லரனை யர்ச்சிப்பர் வீடெய்த வறிந்தோ ரெல்லாம.

### முதுமொழி வெண்பா.

போசன் கவிஞருக்கே போதப் பரிசளித்துத்
தூசிலாக் கீர்த்திபெற்றான் சோமேசா — ஆதலினால்
ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

### திருக்குறள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

சைவசமயாசாரியர் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்.

குரோதி௵ ஆவணிமீ. } இங்ஙனம் சி. சுவாமிநாதபண்டிதர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## எம் இறைவரது திருமேனி.

---

எம் இறைவராகிய சிவபெருமான் அருவப்பொருளும் அல்லா; உருவப்பொருளும் அல்லர்; அருவுருவப் பொருளும் அல்லர். அம் மூவகைப் பொருளும் எம் இறைவராகிய அவராலே படைக்கவும், காக்கவும், அழிக்கவும் படுதலால், அவ்வாறாகாத தாம் அவற்றுள் ஒன்றாதல் ஒருபொழுதும் இல்லை; ஆதலால் அம் மூவகை வடிவமும் அவர்க்கில்லையாம்; அவரது திருமேனி அம் மூவகை வடிவங்கட்கும் அப்பாற்பட்டதேயாதல்வேண்டும். இவ்வுண்மையை, "சிவனருவுருவுமல்லன்" என்னுஞ் சுருதி பற்றியும் உணர்ந்துகொள்ளப்படும்.

இனி, அம் மூவகை வடிவங்கட்கும் அப்பாற்பட்டதாகிய அவ் விறைவரது திருமேனியை அம்மூவகை வடிவங்களில் ஒன்றுபற்றி அறிவோம் என்றல் எங்ஙனம் கூடும?

நமது உருவுடலின் கண்ணதாகிய அறிவும் தனக்குரிய விடயங்களைத்தானும் ஒவ்வொன்றுபறிவதன்றி ஒருங்கே யறியமாட்டாதே! ஒரு விடயத்தின் கண்ணும் விட்டுவிட் டறிவதன்றி இடையீடின்றி யறியமாட்டாதே! அதுவும் உறக்கம், மூர்ச்சை முதலியவற்றிற் சிறிதும் இல்லையாய்விடுமே!

இவ்வாக்கையும் அதுவேயன்றோ? ஆகவே, நிலையில்லாத இவ்வறிவைக்கொண்டு நிலையில்லாத இவ்வுருவுடலிலே நின்று, நிலையில்லாத வுருவுடலோடு வினை இரண்டற்கும் அப்பாற்பட்ட அவ் விறைவரது திருமேனியை நாம் எவ்வா றறிவது? இவ்வறிவினாலே அறியமுடியாமையைக் "கண்முதற்புலனாற் காட்சியுமில்லோன்" என்னும் சுருதி பற்றியும் உணர்ந்துகொள்ளப்படும்.

இவ்வாறே மனம், வாக்கு முதலியவற்றாலும் உணர்ந்துரைத்தல் அரிதென்பது, "உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும்படாஅன்", "சொற்பதங்கடந்த தொல்லோன்", "நூலுணர்வுணரா நுண்ணியோன்" என வரும் சுருதிகளாற் பெறப்படும்.

இவ்வியல்பினாலே நிலைபெறும் நம் மிறைவரது திருமேனி நம்மனோர்க்கு மாத்திரம் இத்தனை யரிதாகின்றது என்று கொள்ளற்க.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"— எனத் துணிந்தருளும் பெரும்பேறு பெற்று, அவ்விறைவரது திருவருட் கண்கொண்டு அவ்விறைவரது திருநடங் கும்பிடப் பெற்றுச், சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெற்றுள்ள எம் "அம்மை" யாருமே, "அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்—எவ்வுருவோனும்பர்பிரான் என்பார்கட்கென்னுரைக்கேன், எவ்வுருவோ நின்னுருவ மேது" என்றருளிச்செய்வராயின், நம்மிறைவரது திருமேனியினியல்பறிந்து வழிபடுதற்கு, அவ்விறைவரது திருவருட்கண் ஒரு சிறிதாயினும் கைகூடப்பெறாத நாம் யார்? நாமும் அத்திருமேனியினியல்பை யறிவோமென் றெழுதல் நகையேயன்றோ? அன்றியும் "ஆழ வமுக்கி முகப்பினும் ஆழ்கடலில், நாழி முகவாது நானாழி" என்றலால், நாம் எவ்விதத தாற்றான் எத்தனையாகத்தான் முயன்றாலும், நம் மறிவின் சிறுமைக்கும் அவ்விறைவர் பெருமைக்கும் எவ்வளவு தூரம்?

ஆதலால், அவ்விறைவரோ நமக்கு அருள் செய்தாலன்றி, அவ்விறைவரது திருமேனியியல்பை யுணர்தலும், அவ்வியல்புக் கேற்கும்வகை யறிந்து அவனை வழிபடுதலும் நமக்கு எலாவாம். இவ்வுண்மை "காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே", "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்னுஞ் சுருதியால் உணர்ந்துகொள்ளப்படும். அன்றியும் "பண்ணேனுனக்கான பூசை — சருணாகரக் கடவுளே" என்னும் தாயுமானவரானும் அஃதினிதுணர்ந்துகொள்ளப்படும்.

இவ்வாறு இறைவரது திருவருட்கண்கொண்டு காண்பதன்றி, மெது தற்போதத்தாலே முனைத்து நின்று காண்போமாயின், நாம் எத்தனை காலந்தான் அங்ஙனம் முயன்றாலும் அவ்விறைவரது திருமேனியினியல்பை ஒருவாற்றானும், ஒரு சிறிதாயினும், ஓர் மாத்திரைப் பொழுதாயினும் உணர்தல் செல்லாது. இவ்வுண்மையை "அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன் இவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே." எனவும், "திசைமுகன் சென்று தேடினர்க்கொளித்து, முறையுளியொற்றி முயன்றவர்க்கொளித்தும், ஒற்றுமை கொண்டு நோக்குமுள்ளத் துற்றவர் வருந்த வுறைப்பவர்க்கொளித்து, மறைத்திற நோக்கி வருந்தினர்க்கொளித்தும், இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க், கத்தந்திரத்தி னவ்வயினொளித்து, முனிவறநோக்கி நனிவரக் கௌவி, ஆணெனத்தோன்றி யலியெனப்பெயர்ந்து, வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின், ஐம்புலன் செலவிடுத் தருவரைதொறும்போய்த், துற்றவை துறந்த வெற்றுயிராக்கை, யருந்தவர் காட்சியுட் டிருந்தவொளித்து, மொன்றுண்டில்லை யென்றறி வொளித்தும், பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும், ஒளிக்குஞ்சோரன்" எனவும் வரும் சுருதிகளாலும் உணர்ந்துகொள்ளப்படும். படவே, அவ்விறைவரது திருவருளின்றி ஒன்றுமமையாது என்பது செற்றெனவிளங்கும். அத்திருவருளும் அவ்விறைவனைச் சிந்தனை செய்தாலன்றி அமையாது. அது "சிந்தனையுனக்குத் தந்தேன் திருவருளெனக்குத் தந்தாய்" என்னும் திருவாக்கானறிக. அச்சிந்தனையும் மனத்தாற் பற்றினன்றி யமையாது; மனத்திற்கும் பொருளிருந்தாலன்றிப் பற்றுதல் செல்லாது. பொருளும் எவ்வாற்றாலாயினும் அறியத்தக்க பொருளாயிருப்பினன்றி அதனை அறிவதுமில்லை; பற்றுதலும் இல்லை. அறிந்த பொருள் கொண்டு அறியாத பொருளைக் கருதியறிதுமெனின், அவ்வாறு அறியும் அறிவும் பாசத்தாற் கட்டுண்ட பசுவறிவேயாதலால் அப்பசுவறிவைக்கொண்டு பதிப் பொருளை அறிந்தோமென்றெண்ணுதல் புல்லறிவாண்மையேயாம். அப்பதியின் அருளொளி கலத்தலன்றி இப்பசுவறிவாகிய கண் அப்பதிப் பொருளைக் கண்டுகொள்ளுதல் ஒருபொழுதும் ஒருவாற்றானும் செல்லாது. இவ்வுண்மையெல்லாம் அறிவுநூல் பற்றி ஆராய்ந்து ஒருவகையாற் கண்டுகொள்ளப்படும். பின்னும் பிணங்கினவர்க்கிது கூறுதல் "காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான், கண்டானாந் தான்கண்டவாறு" என்பதற் கிலக்கியமாய் முடியும்.

இவ்வாறு இறைவன் நமதறிவிற்கு மிக அரியராயிருத்தலால், அவனை அறிய ஒருப்பட்ட நம்மறிவு, அவரது அருள்பெறுந் துணையும் அவ்விறைவரது உடைமையாகிய எனைப் பொருள்களை அறிந்து பழகிய அவ்வறிவாற்றல் கொண்டே, அவனையும் அறிய வொருப்படுமேயன்றி, வேறோரறிவாற்றல் புதுவதாய்த் தோன்றி, அதனால் அவ்விறைவனை யறிய ஒருப்படுதல் இல்லை. அவ்வாறறிந்த வழியிலன்றி, அதற்கு மேலாக ஓர் நெறிபற்றி அவ்விறைவனை வழிபடுதலும் அவ்வறிவிற் கியலாது. ஆகவே அவ்வறிவு அவ்விறைவழிபாட்டினைச் செய்ய வெழுங்கால், அவ் விறைவனை அவர் படைத்தருளிய உலகத்தின் வைத்து வேறாக வேண்டுதல் கருதிப் பிரித்தறிதல் கூடுமாயினும், அதுவும் தான் பயின்ற அவ்வுலகத்தையின்றி யமையாதாம்; அங்ஙனம் பிரித்தறியுமிடத்தும் அவ்வுலகத்திலமைந்த இறைவர் செயல்கண்டு அவ்விறைவனை எங்

குமிருப்பவராகக் கண்டு வழிபடினன்றி, அவ்விறைவர், தான் செய்யும் வழிபாட்டை உணர்ந்து அருள் செய்வர் என்று கொள்ளுதல் அதற்கு இயலாதாம்; அவ்வாறுகொண்டாலன்றி அவ்விறைவரிடத்தே அவ்வறிவுக்கு நம்பிக்கை பிறவாதாம்; ஆகவே அவ்வறிவு அவர் எங்குமிருத்தலை அறிதலும், நயபுதலும், வழிபடலும் வேண்டுதல் ஒருதலையாம்.

எங்குமிருத்தலாவது எங்கும் நிறைந்திருத்தல்; இவ்வாறு நிறைந்திருத்தல் கொண்டே இப்பிரபஞ்சத்தை அவ்வறிவு அவ்விறைவர்க்குத் திருமேனியெனவும் வேண்டும்; என்னை? உடலின்கண் நிறைந்துள்ள உயிரைப் பொருட்டன்மைநோக்கி, அவ்வுடற்கு வேறாக வைத்துணரினும், அவ்வாறுணர்ந்த அதுவே மீட்டும் கலப்புத் தன்மைநோக்கி, அவ்வுடலையும் அவ்வுயிராகவறியும்; அதுபோலவே, இறைவனைப் பொருட்டன்மை நோக்கி, இவ்வுலகின் வேறாயறிந்துகொண்ட அவ்வறிவே, மீட்டும் கலப்புநோக்கி அவ்வுலகையும் அவ்விறைவனாகவே அறிந்து வழிபடற்கண் இழுக்கில்லையென்றே கொள்ளப்படும். இன்னும் இவ்வுண்மையை உய்த்துணர்ந்து விரித்துரைத்துக்கொள்ளவும்படும். என்னை? யாதானுமோர் கருத்து வகைபற்றி அங்ஙனம் வகைசெய்து கோடல் அறிவுடையோர்க் கியல்பாகலான்.

இவ்வாறுலகை இறைவற்குத் திருமேனியாகக் கொள்வார் அதனை எண்வகையாகப் பிரித்துக்கொள்வர். அது "அவனேயிருசுடர்தீ யாகாசமாவான், அவனேபுவி புனல்காற்றுவான—அவனே-இயமான னாயட்ட மூர்த்தியுமாய் ஞான, மயனாகி நின்றானும் வந்து" எனவரும் சுருதியாற் றெளிந்துகொள்ளப்படும்.

இன்னும், அவ்விறைவன்கொள்ளும் திருமேனிகளை தாவரம் சங்கமம் என்னும் இவ்விரண்டில்வைத் துணரவும்படும். தாவரமாவன நிலையியற்பொருள்கள்; சங்கமமாவன இயங்கியற்பொருள்கள். தாவரத்துள்ளும் இலிங்கமும், சங்கமத்துள்ளும் குருவும் அடியவருமே சிறப்புடையவாகக் கொள்ளப்படும். படவே இவ்வகைபற்றி இறைவற்குத் திருவுரு மூன்றாதலும் அறிந்துகொள்ளப்படும். தாவர சங்கமங்களுள்ளும், சங்கமமே சிறப்புடையதாம். அது "படமாடக் கோயிற் பரமர்க்கொன்றீயில், நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா, நடமாடக்கோயில் நம்பர்க்கொன் றீயிற், படமாடக் கோயிற் பரமர்க்கங்காமே" என்னும் திருமந்திரத்தா லோர்த்துணர்ந்துகொள்ளப்படும்.

இனி தாவரமும் அருவத்திருமேனியும், உருவத்திருமேனியும், அருவுருவத் திருமேனியும் என மூவகைப்பட்டு; அவற்றுள்ளும சிறப்புச் சிறப்பின்மைகள் ஆராயப்படுதலும் உண்டு. அன்பொன்றே யுடையார்க்கவ் வாராய்ச்சியில்லை.

அவற்றுள் உருவத்திருமேனி கரசரணாதியவயவங்களுடையவாக உணரப்படினும், அவற்றிலுள்ள அங்கப்பிரத்தியங்கசாங்க உபாங்கங்களெல்லாம் உணர்வுடையார்க்கு ஒவ்வோர் குறிப்புப் பொருளை உணர்த்தி நிற்பனவாம். இவ்வுண்மை தேறப்பெறாத பிறரெல்லாம் இவற்றை இகழ்ப; தேறித் தெளியப் பெற்றோர் புகழ்ப. அதனை "இனைப்பொருளுணர மாட்டாதாரெல்லாம், இவனை இகழ்வரேகண்டீர்—இவர் தமது—பூக்கோல மேனிப் பொடிபூசி யென்பணிக்க, பேய்க்கோலங்கண்டார் பிறர்" எனவும்; தூமதிசடைமிசைச் சூடுதல் தூநெறியாமதி யானென அமைத்தவாறே, யறனுருவாகிய ஆனேறேறுதல், இறைவன் யானென வியற்றமாறே, அதுவளவனென நின்றமையார்க்கும், பொதுநிலையானென வுணர்த்தியபொருளே, முக்கணனென்பது முத்தீவேள்வியிற், றெக்கதென்னிடை யென்பதோர் சுருக்கே, வேதமான்மறி யேந்துதல் மற்றதன், நாத னானென நவிற்றுமாறே, மூவிலையொருதாட் சூலமேந்துதல், மூவரும் யானென மொழிந்தவாறே, யெண்வகைமூர்த்தி யென்பதிவ்வலகினில், உண்மையானென உணர்த்திய வாறே, நிலநீர்தீவளி யுயர்வானென்றும், உலவாத்தொல்புகழுடையோய் என்றும், பொருளுநற்பூசப் படையே யென்றும், தெருளநின்றலகினிற் றெருட்டுமாறே, ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும், ஓங்குநின்பெருமை யுணர்த்தவுமுணராத், தற்பெருவிமாந்தர் தமயிடைப்பிறந்தசொற் பொருள்வன்மையிற் சுழலுமாந்தர்க்கு, ஆதியாய்அறுதொழிலாளரோதலேவாவொற்றியூர, சிறுவர்தம் செய்கையிற் படுத்து, முறுவலித்திருத்தி நீ முகப்படுமளவே" என்னும் சுருதிகள் பற்றி அறிந்துகொள்ளப்படும்.

(To be revised and enlarged)

ஓர் சைவன்.

---

திருநெல்வேலி மாணவர் சங்கத்தின் ஹிந்து மதாபிமானிகளிற் சில விக்கிரஹாராதன விஷயமாய்ப் பிரசுரஞ் செய்திருக்கிற பத்திரிகையிற்கண்ட வினாக்களுக்கு

## விடை.

(6-வது வினாவுக்கு விடையின் தொடர்ச்சி)

பரமாத்மாவுக்குத் திருக்கலியாணஞ் செய்து வைப்பதும், இரண்டு பெண்கள் மணஞ் செய்விப்பதும், பள்ளியறை சேர்த்துவைப்பதும், அன்னிய மதத்தினர் மனதில் அசங்கியத்தை யுண்டுபண்ணுதா வென்று வினாவிய பூர்வபக்ஷிகள் ஹிந்து மதத்தினுடைய ஸாமான்னிய தத்துவங்களைக் கூட தாங்கள் தெரிந்துகொண்டவர்களில்லையென்று வெளியிட்டவர்களாகிறார்கள். ஷை தத்துவங்களை யறியாமல் ஹிந்து மதாபிமானிகளென்று பெயர் கொண்டவர்களே அசங்கியமாக எண்ணும்பக்ஷத்தில் அன்னிய மதத்தினர் அப்படி எண்ணுவது அக்கிரமமா? ஷை இருவகையார்களுடைய எண்ணத்திற்கும் காரணம் ஞானசூனியதையைத் தவிர வேறில்லை.

நித்தியமாய் இரண்டற்றதாயுள்ள பரம்பொருளாகிய பிரம்மம் தன்னிடத்தி லுற்பத்தியான மாயையை ஸ்வீகரித்து ஈசுவர ரூபியாய் ஆவிர்ப்பவித்து பாஞ்சபௌதிகமான இந்தப் பிரம்மாண்டத்திற்கு சிருஷ்டி ஸ்திதிஸம்ஹாரகாரகராயிருந்து வருகிறார். இப்பிரபஞ்சம் விளங்கி வருகிற கல்பம் பூராவும் ஈசுவரர் தன்னுடைய ஸன்னிதான மாத்திரத்தினால் தன் மாயையைக் கொண்டு ஸகலத்தையும் நடத்தி வருகிறார். கல்பம் முடிந்து பிரளய காலம் வந்தவுடன் மாயாகிருதமான ஸகலத்தையும் அழித்து மாயாதேவியையும் தனக்குள் அந்தர்ப்பாவப்படுத்தி ஏக

மாய் ஸச்சிதானந்த மாத்திர ஸகுணராய்நின்றுவிடுகிறார். பரமாத்மா தன்னுடைய மாயையை ஸ்வீகரித்து இப் பிரபஞ்சத்திற்குக் காரணராயிருப்பதை நன்றாய் போதிப்பிவிக்கும்பொருட்டு நமது ஸ்தூலபுத்திக்குத் தக்கபடி பிரத்தியக்ஷமான அடையாளங்களை யேற்படுத்தி பரமேசுவரருக்கும் லோகமாதாவாகிய மாயாதேவிக்கு திருக்கல்யாண உத்ஸவம் நடத்தி வரப்படுகிறது. இந்த உத்ஸவமானது பரம பவித்திரமாயுள்ளது. இதின் மூலமாய் அநேக ரகஸியதத்வங்கள் வெளியிடப்படுகின்றன. ஆனால் இந்த தத்வங்கள் கண்ணைத் திறந்துகொண்டு ஜாக்கிரதையுடனும் சிரத்தையுடனும்பார்த்துக் கவனிப்பவர்களுக்குப் புலப்படுமேயொழிய கண்மூடிகளுக்கு புலப்பட மாட்டாது.

நமது வேதாந்த கிரந்தங்களினால் மாயையை பலவிதமாக வர்ணித்திருக்கிறார்கள். மாயை பெரும்பாலும் சுத்த சத்துவகுணத்தை முக்கியமாயுடையதென்றும், தமோகுணப் பிராதான்னியதை யேற்பட்டபோது மாயாப் பிரகிருதி ஆவரண சத்தியென்றும் விக்ஷேப சத்தியென்றும் இரண்டாகப் பிரிந்து இவ் விருவகை சத்திகளினால் இப் பிரபஞ்சம் தோன்றப்படுகிறதென்றும் மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். ஷை மாயையின் உட்பிரிவு சத்திகளைக் காட்டக்கூடியதாக சில ஆலயங்களில் இரண்டு அம்பிகைகளேற்பட்டிருக்கிறார்கள். எம்பெருமானுக்கு ஸ்ரீதேவி, பூதேவி யென்கிறதாக இரண்டு பத்னிகளிருப்பதாகச் சொல்வது தெரியாத்தனத்தால் சொல்லப்பட்டதல்ல. ரூபமுள்ள ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் உபாதான காரணமும் நிமித்த காரணமுமுண்டு. மண்குடத்திற்கு உபாதான காரணம் மண். குயவனுடைய கிரியாசக்தி நிமித்த காரணம். இப்பிரபஞ்சத்திற்கு உபாதான காரணத்திற்கு அதிதேவதை பூதேவி. ஸ்ரீதேவியைக்கொண்டு ஈசுவரர் நிமித்தகாரணராகிறார். ஆகையால் இவ் விருவர்களையும் எம்பெருமானுக்குப் பத்னிகளாக பாவித்து உத்ஸவாதிகள் நடத்தி வரப்படுகிறது.

பாவனமாயுள்ள ஆலய திருக்கல்யாண உத்ஸவங்களை சரியான எண்ணத்துடனும் பக்தியுடனும் கவனித்து வரவேண்டியது ஹிந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் கல்யாணஞ் செய்துவைக்கும்போது ஷை கல்யாணத்தை மதவிஷயமான புண்ணிய ஸம்ஸ்காரமா யெண்ணவேணுமென்றும் ஸ்திரீபுமானுடைய விவாகம் தர்மானுஷ்டானத்திற்காக ஏற்பட்டிருக்கிறதென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மனுஷியவிவாகமே பவித்திரமென்று எண்ணப்பட வேணுமென்றால் ஸகலவிதத்திலும் பரிசுத்தமாயும் வேதாந்த பரமதத்வங்களை வெளியிடக்கூடிய திருக்கல்யாண உத்ஸவம் எவ்வளவு மகிமையுள்ளதென்று பக்தர்களுக்குத் தெரியவரும்.

நமது ஹிந்து சாஸ்திரங்களிலுள்ள விஷயங்களையறியாமல் இப்பொழுது ஹிந்துக்களில் அநேகர்கள் விவாகமென்றால் புணர்ச்சிசெய்ய அனுமதிகொடுக்கும் ஒரு ஸம்பந்தமென்கிறதாக மாத்திரம் எண்ணி ஹதோகதியாய் கெட்டுப்போயிருக்கிற நிலைமையை யனுசரித்து திருக்கல்யாண விஷயத்திலும் இதேவிதமான அபிப்பிராயத்தை காட்டத் துணிந்திருக்கிறார்கள். இந்த அபிப்பிராயமுள்ளவர்களின் மனதில் பள்ளியறை சேர்த்துவைப்பது அசங்கியத்தை யுண்டுபண்ணாமலிருக்கமுடியுமா? மஞ்சட்காமாலையினால் கெடுக்கப்பட்ட கண்ணுக்கு சகலபதார்த்தமும் மஞ்சளாய்க்காண்பதுபோல் விஷயாஸக்தர்களாயிருக்கிற நூதன படிப்புள்ளோர்களுக்கு பள்ளியறைசேர்ப்பது விகாரமாகத்தான் தோன்றும். பக்திமான்களுக்கும் ஞானிகளுக்கும் இதுவே சுத்தமான நிச்சய சுகத்திற்குக்காரணமான நல்லறிவையும் ஞாபகத்தையும் மூட்டிவிடுகிறது. பிரளயகாலத்தில் சிவசத்திகள் எப்படி ஒன்றாய்க்கலந்து, சத்தி சிவனுக்குள்ளடங்கி பரமேசுவரர் ஏகமாய் பரப்பிரம்ம ஸ்வரூபியாய் மிஞ்சுகிறாரோ அந்த பரம தத்வத்தை பள்ளியறை உத்ஸவ மூலமாய் ஆகமசாஸ்திரங்கள் வெளியிடுகின்றன. இவைத்தெரிந்துகொள்ளாத தோஷத்தினாலும் கலிவிருத்தியின் மகிமையினாலும் மனதில் தோன்றிய வாறெல்லாம் வாக்கினாலும் எழுத்தின் மூலமாயும் தூஷணைகளைச்செய்து சிலர் கணபங்கத்தான ஈசுவராபசாரஞ்செய்து வருகிறார்கள்

இந்த 6-வது வினாவின் கடைசியில் மலஜலவிஷயமாய் கேள்விகேட்கப்பட்டிருக்கிறது. எந்த விஷ்ணுவாலயத்தில் எம்பெருமான் மலங்கழித்து வருகிறாரென்று எனக்குத்தெரியவில்லை. நான் பார்த்தமட்டிலும் எல்லா ஆலயங்களிலும் ஈசுவரர் நிர்மலராயிருக்கிறாரேயொழிய மல ஸஹிதராய் ஈசுவரனை யொருவரு மெண்ணுவதில்லையென்று தோன்றுகிறது.

(இன்னும் வரும்.)

G. ராமச்சந்திர அய்யர்.

---

## பத்திராதிபர் குறிப்பு.

மருட்பாமறுத் தருட்பா நிறுத்து மதகைமிக்க "மாயாவாத தும்ஸகோளரி" யார்க்கும், அவர்களுடனின்று பல்லாற்றானும் பரிந்து துணைபுரிந்து நின்ற வேலைத்திருவருள் வடிவங்கட்கும் பல்லாண்டுகூறிப் பன்முறையும் பணிந், திறைஞ்சும் பெரும்பேறு பெற்றிவ் வாக்கையாலாய பயன்கொண் டிறுமாக்கின்றோம்.

***

உறையூர்ச் சைவசித்தாந்த சபைக் காரியதரிசியவர்கள், ஸ்ரீமாந், தக்ஷிணாமூர்த்திப்பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டுள்ள "திருவருட்பா விளக்கம்" "மருட்பா" மருட்கையை வாட்ட வல்லதாம்.

***

"உறையூர்: ஸ்ரீ பஞ்சவர்ணேசுவர சுவாமி கோயில், சைவசித்தாந்த சபையின் ஆறாவதுவருஷ அறிக்கை"யும், "மஹோற்சவச் சிறப்பு"ம் பற்றி அடுத்தமுறை குறிக்கப்படும்.

***

"விக்கிரகாராதன கண்டன வெதிரேக"த் தொடர்ச்சி அடுத்தமுறை வெளிவரும்.

---

" திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க"

திருச்சிற்றம்பலம்.

---

Printed and published by M. Draviam Pillai
Aryaprakasini Press, Tinnevelly Bridge.